# யாமம் நாவலில் நவீனத்துவம்

***ஆய்வாளர் க. சமயேஸ்வரி***
Ref.No:28048/ph.D.k8/Tamil/
P.T./Extn.1&2/Re.Regn../October2016
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)
முதுகலைத் தமிழாய்வுத்துறை, உருமு தனலெட்சுமி கல்லூரி
(பாரதிதாசன் பல்கலைக்கழகம் இணைவு பெற்றது)
திருச்சிராப்பள்ளி

***முனைவர் ந. விஜயசுந்தரி***
இணைபேராசிரியர் & ஆய்வு நெறியாளர்
முதுகலைத் தமிழாய்வுத்துறை, தலைவர் (பொ)
உருமு தனலெட்சுமி கல்லூரி
(பாரதிதாசன் பல்கலைக்கழகம் இணைவு பெற்றது)
திருச்சிராப்பள்ளி

**மலர்: 13**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஆகஸ்ட்**

**வருடம்: 2025**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17078439

***முன்னுரை***

*நாவலில் நவீனத்துவம் என்பது கதையின் அமைப்பு கதாப்பாத் திரங்களின் சித்திரிப்பு மற்றும் கருப்பொருள்களில் வெளிப்படுகிறது. பதினெட்டாம் நூற்றாண்டு சென்னையை கதைக்களமாகக் கொண்டு இந்நாவல் சமகால மனிதர்களின் உளவியல் சிக்கல்கள் அவர்களின் ஆசைகள் ஏக்கங்கள் குறித்து வெளிப்படுத்துகின்றது. புனைவுக்கும் உண்மைக்கும் இடையேயான எல்லையை உடைத்து எதார்த்தத்தையும் கலந்து அமைந்துள்ள விதத்தில் நவீனத்துவம் வெளிப்படுகிறது.*

**நவீனத்துவம்**

*“நவீனத்துவம் என்பது 19 ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த தொழில் நுட்பம் மற்றும் அறிவியல் வளர்ச்சி காரணமாக மனிதர்களின் சிந்தனைகளிலும் சமூக அமைப்புகளிலும் பண்பாட்டிலும் ஏற்பட்ட மாற்றங்களைக் குறிக்கின்றது”.*[1]

**நவீனத்துவம் விளக்கம்**

*நவீனத்துவம் என்பது பழமை தொன்மை என்பவற்றிற்கு மாறானது என்ற பொருள் காணப்படுகிறது. மிக நீண்ட காலமாக இருந்துவந்த சமூக பொருளாதார நிலைமைகளிலிருந்து அறிவியல் தொழில் நுட்பப் புரட்சி காரணமாக உலகில் பெரும் மாற்றம் ஏற்படுகிறது. முதலாளித்துவம் பெரும் சக்தியாக, 19- ஆம் நூற்றாண்டில் வளர்கிறது.*

இதனோடு அல்லது இதன் விளைவாக அன்றைய சமூக பொருளாதாரப் பண்பாட்டுச் சூழ்நிலைகளை எதிர்கொள்கிற விதத்தில் நவீனத்துவம் தோன்றுகிறது. நவீனத்துவம் என்பது வெறுமனே ஒரு கலை இலக்கியக் கொள்கை மட்டும் அல்ல அது ஒரு வாழ்க்கை முறை ஒரு மனநிலை, ஒரு பண்பாட்டு வடிவம், பழமை, மரபு என்பது நீண்ட காலமாக ஒரே மாதிரியான பாதையில் ஒரே மாதிரியான போக்கில் சென்று கொண்டிருக்கும் நிலையில் அதனை மறுத்து, அதற்கு புதிய பாதைகளையும் புதிய தடங்களையும் தேடுவதாக நவீத்துவம் அமைகிறது. செய்யுள் வடிவம் என்பது இலக்கியத் துறையில் தொன்று தொட்டு வரும் இருப்புகளையும் வெவ்வேறு நிகழ்வுகளையும் சொல்லுவதற்கு உரிய ஒரு வடிவமாக உள்ளது. பல்வேறு துறைகளிலும் அவை ஆதிக்கம் செலுத்துகிறன. இதன் காரணமாகப் புதிய இலக்கிய வகைகள் தோன்றுகின்றன. நவீனத்துவம் ஒரு புதிய பண்பாட்டு நிலைமையின் வெளிப்பாடாகக் கலை, இலக்கியத் தளத்தில் அமைகின்றது.

## நவீனத்துவம் - சில அடிப்படைகள்

நவீனத்துவம் என்பது கலை இலக்கியத் தளத்தில் அடிப்படைகளாகவும், வெளிப்பாடுகளாகவும் அமைகின்றவற்றுள் மிக முக்கியமானது. அது, புதியகலை புதிய இலக்கியம், புதிய வடிவம் என்ற நிலைகளையும் தேவைகளையும் வற்புறுத்துகின்றது. தமிழில், சற்றுப்பழைய இலக்கியவடிவங்கள் தலபுராணங்கள், பிள்ளைத் தமிழ், உலா போன்ற பிரபந்தங்கள் எனின், அவற்றிற்கு மாறாக உரைநடை இலக்கியங்கள் மற்றும் அவற்றின் பல வகைமை நவீனத்துவம் கொண்டாடப்படுகிறது. பொதுவாக, பழைய இலக்கிய வடிவங்கள் தத்தமக்குரிய சமகாலங்களின் பிரச்சினைகளையும் சமூக நீரோட்டங்களையும் சொல்லுவதில்லை. ஆனால் நவீன இலக்கியம் என்பது சமகாலச் சமூக வாழ்வுகளை ஏதாவதொரு வகையில் முன்னிறுத்துகின்றது."[2]

## நவீனத்துவம் பற்றி அறிஞர் கருத்து:

"நவீனத்துவம் என்பது மனித சுதந்திரத்தின் மீதான நம்பிக்கை பல தத்துவ ஞானிகள் கருதியது போல் இயற்கையானது மற்றும் பிரிக்க முடியாதது. மனித பகுத்தறிவு திறன் உலகின் அறிவுத் திறத்துடன் இணைந்தது, அதாவது மனித பகுத்தறிவு, அதன் இலக்கணத் தன்மை ஆகியவற்றில் உறுதியான தன்மையை நோக்கிய முதல்படியாக இந்த அடிப்படை அர்பணிப்பு தனிநபர் மற்றும் கூட்டுத்தனிநபர் சுயநிர்ணயக் கொள்கை களாவும் கொள்ளப்படலாம்."[3]

## தற்கால இலக்கியம்

தொன்று தொட்டு வரும் தமிழ் இலக்கியச் செய்யுள் மரபுக்கவிதை, பாலினங்களைக் கடந்து சிறுகதை, புதினம், கட்டுரைகள், புதுக்கவிதை என புதிய வடிவம் எடுத்துக்காட்டாக வரையறுக்க முடிகிறது. இதன் மூலம் இலக்கியம் பன்முகத்தன்மைக் கொண்டது என்பதை உணரமுடிகிறது. 18 ஆம், 19 ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் தமிழநாட்டில் அரசியல், மதம், கல்வி போன்ற தளங்களில் பலவிதமான மாற்றங்கள் இடம் பெற்றன. இதனை தொடர்ந்து எழுந்த "எஸ். ராமக்கிருஷ்ணனின் "யாமம்" புதினத்தில் நவீனத்துவம்" எனும் தலைப்பில் இக்கட்டுரை ஆராயப்பட்டுள்ளது.

## மொழி நடை

எஸ். ராமகிருஷ்ணனின் மொழி நடை எளிமையானதாகவும், கவித்துவமானதாகவும், அமைந்துள்ளது. இது நாவலை ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள் அடக்காமல் படிப்பவர்கள் அனைவர் மனதிலும் எளிய நடையில் சென்றடையுமாறு அமைந்துள்ளது. புனைவுக்கும் உண்மைக்கும் உள்ள

வேறுபாடும் அவற்றிற்கு இடையேயான எல்லைகள் சற்று குறைவாகவே உள்ளதை நாவல் சுட்டுகிறது.

### நிலவியல் கோட்பாடு

நவீன நிலவியல் வெளி என்பது மரபின் கலவை நவீன வாழ்க்கை என்பதை மரபடையாளங்களின் இணைப்பும் தொலைப்பும் ஆகும் தொலைந்ததுக்குள் தேடினால் அவரவர் அடையாங்களின் பங்களிப்பும் இருக்கவே செய்யும் அதே நேரத்தில் நவீத்திற்குள் கரைந்துவிட்ட மரபடையாளங்களை தேடி கொண்டிருப்பது நவீன வாழ்வாக இருக்கவே முடியாது என்பது உண்மை என்பதை யாமம் புதினத்தில் கார்த்திகேசு சிவத்தம்பி என்ற ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

நிலவியல் பண்பாட்டை எழுதுதலே நாவல்கலையின் முக்கிய நோக்கம் என்ற கருத்தியலை விவாதிக்கவும் விளக்கவும் தமிழில் பல நாவல்கள் கிடைக்கின்றன. அவற்றிலிருந்து வேறுபட்ட ஒன்றாக எஸ். ராமகிருஷ்ணின் யாமம் என்ற நாவல் உள்ளது. ஒவ்வொரு திணை (அ) நிலத்தை எழுதி தங்களை அடையாள படுத் தியவர்களுக்கு மாறாக நவீன நிலமும் அதன் உருவாக்கமும் என்பதை முன் வைப்பதாக சொல்வது யாமம். முல்லையும் குறிஞ்சியும் முறையில்திரிந்த பாலை என்பதோர் படிவம் கொண்டதை போல மதராபட்டினம் ஐவகை நிலத்து பண்பாட்டுக் கூறுகளோடு அந்நிலங்களிருந்து மனிதர்களும் வந்து சேர்ந்ததே இப்பெருநகரம் என்கிறது.

### நவீன வரலாற்றுக் கோட்பாடு

வரலாற்றின் ஆதாரம் கடற்பாக்கம் என்றும் கடலோர கிராமம் மதராப்பட்டணமாக ஆகிவிட்டதே நிகழ் காலத்தின் இருப்பு நவீனத் தமிழ் வாழ்வின் அடையாளமாக நம்முன்னே பரந்து விரிந்திருக்கிறது மதராபட்டினம் இன்று சென்னைப் பட்டணமாக உள்ளது என்பதை யாமம் நாவல் உணர்த்துகிறது.

பெருநகர உருவாக்கத்திற்கு தொழில், வியாபாரம், கல்வி, நிதி, நிர்வாகம் அறிவையும் ஞானத்தையும் தேடல் என பல காரணங்களுக்காக மனிதர்கள் வந்து சேர்கிறார்கள் என்று பல விதமான செயல் மாற்றங்களுடன் மக்கள் ஒன்றோடு இணக்கம் கொண்டு வாழ்கிற புமியாக மாறுகிறது. அத்தர் தயாரிக்கும் கரிம், கிருஷ்ணப்ப கரையர், சதாசிவ பண்டாரம் போன்றோர் தமிழ் நிலப்பரப்பின் குறியீட்டாவர். நடுத்தர வர்க்க மனிதர்களின் வாழ்க்கை துயரத்தை வெளிப்படுத்த நாவலில் நவீனத்துவம் கையாளப்படுகிறது என்பது நிதர்சனமான உண்மை.

### சமூகக் கோட்பாடு

பட்டணத்து வாசிகளின் சரித்திரத்தில் நான்கு விதமான சரிதங்கள் இருக்கின்றன. ஆண் வாரிசுக்காக மூன்று மனைவிகளை மணம் செய்து காமத்தில் திளைத்து காணாமல் போன கரிம் சரிதம். இரண்டாவது எலிசபத் வெள் எனும் வெள்ளைக்காரியிடம் கொண்ட மோகத்தால் மேல்மலை தளங்களில் பலவிதமான மாற்றங்கள் இடம் பெற்றன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுந்த எஸ்.இராமகிருஷ்ணனின் “யாமம் புதினத்தில் நவீனத்துவம்” எனும் தலைப்பில் இக்கட்டுரை ஆராயப்பட் டுள்ளது.

யாமம் என்னும் நாவலில் பெருந்தோட் டத்தை இழந்த கிருஷ்ணப்பகரையரின் குடும்பபகை, மூன்றாவது ஐரோப்பிய கல்வி என்றும் பாரம்பரியமான உடன்பிறப்புகள் நம்பிக்கைகளின் உறவுகளால் ஏற்படும் காமம் சார்ந்த ஒழுக்க சிதைவு, அதன் தொடர்ச்சி மனச் சிதைவு, வெறுமை உணறும் தருணம் பத்தகிரி விசாலாட்சி கதையில் கடவுளை தேடும் பயணமாக தொடங்கி காமத்தை கண்டடைந்ததாக

மாரி காணாமல் போன கடவுளின் சரிதம் என ஒரே நாவலில் எதார்த்த உலகில் நடைபெறும் சிந்தனைக்கு தக்கவாறு நவீனத்துவம் வெளிப்படுத்துகிறது.

### யாமம்

"பதினெட்டாம் நூற்றாண்டு சென்னை என்ற வரலாற்றுப் பின்னணியை பயன்படுத்தினாலும், நாவல் அந்தக் காலச் சுழலில் வாழும் மனிதர்களின் உளவியல் போராட்டங்களையும், அவர்களின் அக உலகையும் ஆராய்வதில் கவனம் செலுத்தியுள்ளது. இது ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் முடங்காமல், நவீன வாசகர்களுக்குப் பொருந்திப் போகும் வகையில் அமைந்துள்ளது."[4].

### யாமம் - சொல் விளக்கம்

"யாமம்" என்ற சொல் இரவு நேரத்தைக் குறிக்கிறது. நாவலில் குறிப்பிடப்பட்டுள்ள யாமம் (இரவு) என்பது நேரத்தைக் குறிக்காமல், மனிதர்களின் சுக துக்ககங்களையும், அவர்களின் வாழ்க்கையையும் ரகசியமாகத் தாங்கிச்செல்லும் ஒரு ஓடையாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது."[5]

### வரலாற்றுப் பின்னனி

18 ஆம் நூற்றாண்டு சென்னையின் சமூக, பொருளாதார மற்றும் கலாச்சார சுழலை சித்திரிக்குமாறு இந்நாவல் அமைந்துள்ளது. அன்றைய மதராசப்பட்டினத்தின் வாழ்க்கை, வணிகம் மற்றும் மனித உறவுகள் பற்றிய விவரங்கள் கதையுடன் இணைத்து காணப்படுகின்றது.

### கதாப்பாத்திரம்

நாவலில்வரும் ஒவ்வொரு கதாப்பாத்திரமும் சிக்கலான உளவியல் கொண்டவர்களாக சித்திரிக்கப்பட்டுள்ளனர். ஆவர்களின் ஆசைகள், ஏக்கங்கள், ஏமாற்ற்ஙகள், ஆகியவை யதார்ததமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### கருப்பொருள்கள்

காமம், அதிகாரம், ஆன்மீகம், காதல் போன்ற பல்வேறு கருப்பொருள்களை நாவல் கொண்டுள்ளது. இவை அனைத்தும் நவீன மனிதனின் வாழ்க்கைப் போராட்டங்களுடன் தொடர்புடையவையாக அமைந்துள்ளன. இவ்வாறு பலதரப்பட்ட கருப்பொருள்களை கையாண்டுள்ள விதம் நாவலின் நவீனத்துவத்தை வெளிப்படுத்துகின்றது.

### உளவியல் தேடல்

கதாபாத்திரங்களின் மனதிற்குள் ஆழமாகச் சென்று அவர்களின் ஆசைகள், ஏமாற்றங்கள், மற்றும் அகச்சிக்கல்களை இந்நாவல் விளக்குகிறது. ஒவ்வொரு கதாப்பாத்திரத்தின் வாழ்க்கையிலும் "யாமம்" ஏற்படுத்தும் பாதிப்புகள் மற்றும் மனித மனதின் சிக்கலான தன்மைகள் இந்நாவலில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### முடிவுரை

"யாமம்" எனும் நாவல் ஒரு வரலாற்றுப் புதினம் மட்டுமல்ல, நவீன மனிதனின் உளவியல் சிக்கல்களையும், அவர்களின் தேடல்களையும் பேசும் ஒரு நவீன நாவலாக அமைந்துள்ளது. ஒரு சமுதாய பின்புலத்தை நவினத்துவத்தின் வாயிலாக தொழில், வாழ்க்கை, பொருளாதாரம், வணிகம் என சித்தரிப்பதை காணமுடிகிறது. அதன்மூலம் புதுமையான நவீனத்துவத்தை உணரமுடிகின்றது.

### சான்றெண் விளக்கம்


1. ஏயடடடயையெஅ.உழஅ
2. றறற.வயஅடைஎய.உழஅ
3. யாமம் புதினம் -பக் 12
4. நவீனத்துவம் தமிழ்-பின் நவீனத்துவம் -பக் 36

**துணைநூல் பட்டியல்**

1. யாமம் நாவல் - எஸ்.இராமகிருஷ்ணன்.
2. நவீனத்துவம் - தமிழ் பின் நவீனத்துவம் -கார்த்திகேசு சிவத்தம்பி
3. தமிழ் இலக்கிய வரலாறு - க. பஞ்சாங்கம்
4. மார்க்சியம்-வர்க்கம் அடையாளமும் - ந.முத்துமோகன்